PR/2019/34/T

EMBASSY OF JAPAN

From the People of Japan

No. 20, R.G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
Tel: +94-11-2693831~3, Fax : +94-11-2698629
E-mail: cultujpn@co.mofa.go.jp

ஊடக வெளியீடு,

28 நவம்பர், 2019

**மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு ஜப்பான் உதவி**

இலங்கையின் மன்னார் மற்றும் வவுனியா பிரதேசங்களில் மனித நேய கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் 635,420 அமெரிக்க டொலர்களை (சுமார் 110 மில்லியன் ரூபாய்) ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்த நன்கொடை தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு 2019 நவம்பர் 28 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இந்த உடன்படிக்கையில் ஜப்பான் தூதுவர் சுகியமா அகிரா மற்றும் MAG இன் இலங்கைக்கான பணிப்பாளர் வெலன்டினா ஸ்டிவனெல்லோ ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த திட்டத்தினூடாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டு, குறித்த பகுதிகள் பாதுகாப்பான பகுதிகளாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்குவதுடன், இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு தமது சொந்தப் பகுதிகளுக்கு மீளத்திரும்பி தமது வழமையான வாழ்க்கைச் செயற்பாடுகளை முன்னெடுத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாய்ப்பளிப்பதாக அமைந்துள்ளது.

2003 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு பெருமளவு நன்கொடை வழங்கும் நடவடிக்கைகளை ஜப்பான் முன்னெடுத்த வண்ணமுள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் கண்ணி வெடி பாதிப்பற்ற நாடாக இலங்கையை திகழச் செய்யும் நோக்குடன் இந்த உதவிகளை வழங்குகின்றது. அடிப்படை மனித பாதுகாப்பு செயற்திட்டத்துக்கான (GGP) நிதி உதவியாக 36 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தொகை இந்த நடவடிக்கைக்கு உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வாழும் மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கும், மீளக்குடியமர்த்தல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் ஒக்டோபர் மாதத்தில் ஜப்பானிய அரசாங்கம் மேலும் இரண்டு நன்கொடைகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நன்கொடை வழங்கியிருந்தமை தொடர்பில் MAG இன் இலங்கைக்கான பணிப்பாளர் வெலன்டினா ஸ்டிவனெல்லோ கருத்துத் தெரிவிக்கையில், "ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து இந்த நன்கொடையை பெற்றுக் கொள்வதையிட்டு MAG மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. இலங்கையிலும், உலகளாவிய நாடுகளிலும் மனித நேய கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகளில் MAG ஈடுபட்டுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் மாத்திரம், MAG ஸ்ரீ லங்கா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்துக்கிடையிலான பங்காண்மையினூடாக சுமார் 12,000 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதனூடாக பல மக்களை மன்னர், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் தமது சொந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்த்தி, தமது வழமையான வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பிக் கொள்ள உதவ முடிந்தது. ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியினூடாக, உயிர்களை பாதுகாக்க முடியும் என்பதுடன், நாட்டில் வறுமையான நிலையில் வாழும் சமூகங்களுக்கு உதவக்கூடியதாக இருக்கும். ஜப்பானிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான உதவியுடன், கண்ணி வெடி

அகற்றும் செயற்பாடுகளை துரிதப்படுத்தி, இலங்கை அரசாங்கத்தின் இலக்கான 2020 ஆம் ஆண்டளவில் கண்ணி வெடி அற்ற நாடாக திகழச் செய்வது என்பதில் பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

மேலதிக தகவல்களுக்கு, ஜப்பானிய தூதரகத்தின் கலாசார பிரிவை தொடர்பு கொள்ளவும்.

Tel. 011-2693831 ext 231

Email: cultujpn@co.mofa.go.jp